# பத்துப்பாட்டில் அஃறிணைப் பெயர்கள்

# Affinity Names in Pattuppattu

***ம. சுரேஷ்***
முனைவர் பட்ட ஆய்வாளர்
ப.நே, தமிழ்த்துறை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
சேர்க்காடு, வேலூர்

**M. Suresh**
*Ph.D., Scholar, Part Time*
*Department of Tamil*
*Thiruvalluvar University, Vellore*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ்மொழியில் சொல்லுக்கும் பொருளுக்கும் இருக்கும் தொடர்பியல் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கிறது. ஒரு சொல் குறிக்கும் பொருளின் தன்மையே அதன் புரிந்தலுக்கும் வளர்ச்சிக்கும் வரலாற்றுக்கும் வழிவகுக்கும். அவ்வகையில் தமிழிலக்கியத்தின் தொன்மை வரலாற்றை எடுத்து ரைக்கும் தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்களும், பாட்டும் தொகையுமாக விளங்கும் சங்க இலக்கியங்களும் உயர்ந்திணை, அஃறிணை என்னும் வகைமையில் கீழ் பல்வேறு பயனுல்ல பொருளாதமிக்க சொற்களைக் கொண்டுள்ளன. அதன்வழியே அக்காலச் சூழலியலையும் வரலாற்றையும் ஆய்வுகளின் வழியே அறிந்துகொள்ள முடிகிறது. அத்தகைய ஆய்வுப் பொருண்மையைக் கொண்ட கட்டுரையாக இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச்சொற்கள்:***

*தமிழ், மொழி, இலக்கியம், பத்துப்பாட்டு, சொற்கள், கருவிகள், பறை, யாழ்*

## Abstract

*The relationship between word and meaning in Tamil is remarkable. The nature of the thing a word signifies leads to its understanding, development and history. In this way, grammar books including Tolkappiyam, which highlight the ancient history of Tamil literature, and Sangha literature, which is a collection of hymns, have various meaningless words such as 'Uyartini – Ahrinai' Through it, the ecology and history of that time can be known through research. This article is an article with such a research objective.*

***Keywords:***

*Tamil, Language, Literature, Words, Instruments, Drums, Harp*

**Citation**

Suresh, M. "Affinity Names in Pattuppattu." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 88–94.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20095603*

**முன்னுரை**

*மொழிச் சொற்களால் உருவாகியிருக்கிறது. மொழியின் வழியாகவே அனைவரும் அவர்தம் கருத்துகளை வெளிப்படுத்துகின்றனர். எனவே மொழியைக் கருத்துப் பரிமாற்றக் கருவி என்கிறோம். அவ்வாறு மொழி பயன்பாட்டின் வழியே ஒரே பொருளைக் கொண்டதாக இருக்கும் பொழுது மட்டுமே அதன் கருத்துப் பரிமாற்றம் சரியாக அமையும். இல்லையெனில் மொழியை உணரமுடியாத ஒலிகுறிகளாக மாறிவிடும். அதனால்தான் தொல்காப்பியர்''எல்லாச் சொல்லும் பொருள் குறித்ததே என்கிறார். இதுபோன்ற சொற்கள் அடங்கிய சொற்தொகுதி மொழியின் இயக்கத்திற்கு அடிப்படையாகிறது. இதுவே மொழியின் வளத்தையும் மக்கள் வரலாற்றையும் தீர்மானிக்கிறது. இச்சொற்களின் தன்மையை சங்க இலக்கியங்கள் பலவாறு வெளிப்படுத்தியுள்ளன. அவற்றில் இவ்வாய்வு கட்டுரை பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள அஃறிணைப் பெயர்களைக் கொண்டு விவரிப்பதாக அமைந்திருக்கிறது.*

**உயர்திணை -அஃறிணைப் பெயர்கள்**

*அஃறிணை - உயர்திணை என்பதை உயிரக்க உணர்வே தீர்மானிக்கிறது. உண்மையில் சக உயிர்களுடான அன்பும் நேசமும் மனிதனை மனிதனாக உணரச் செய்கின்றன. அதன் வழியே தொல்காப்பியர்,*

***உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே***
***அஃறிணை என்மனார் அவரல பிறவே***
***ஆஇரு திணையின் இசைக்குமென் சொல்லே'***

*என்று மனிதனைத் தவிர்த்த உயிருள்ள - உயிரற்ற அனைத்தையும் அஃறிணை என்கிறார். பொதுவாக அஃறிணையில் ஒருமை - பன்மை என்னும் இரு பால்கள் அமையும் முறை அமையப்பெற்றுள்ளது. மேலும் ''கள்'' விகுதி தொல்காப்பியர் காலத்தில் அஃறிணைப் பலவின் பாலுக்கு[2] மட்டுமே உரியதாகச் சுட்டப்பெற்றுள்ளன. ஆனால் இக்காலச் சூழலில் ''கள்'' விகுதி உயர்திணைக்கும் சுட்டுப் பெயர்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்நிலையில் தொல்காப்பியர் குறிப்பிட்ட கருப்பொருளான தெய்வம், உணவு, விலங்கு, மரம், செடி-கொடிகள், பறவை, தோற்கருவிகள், தொழில், யாழ்[3] என்பவற்றில் ''தெய்வம்'' தவிர்த்த மற்ற கருப்பொருள்கள் எங்ஙனம் பத்துப்பாட்டில் விரவி வந்துள்ளன என்பதை பொருள்பட இனி காணலாம்.*

**உணவு**

*நீரும் சோறும் மனித உயிர்களின் வாழ்வில் இன்னறியமையாத உணவுத் தேவைகளாகின்றன. அதனால்தான் தொடக்கக் காலமனித நாகரிகத்தில் காட்டிலும் மலைப்பகுதிகளும் வாழ்ந்த மக்கள் உணவு தேடுவதையும் உணவு சேகரிப்பையும் அடிப்படை தொழிலாகக் கொண்டிருந்துள்ளனர். தாய்வழி சமூக உருவாக்க மரபில் ''உணவு சேகரித்தல்'' என்னும் குறிப்பு ஆழமானதாகவும் உயிர்த்துவத்தின் அவசியத்தை விளக்குவதாகவும் அமைந்திருக்கிறது. அந்நிலை படிப்படியாக வளர்ந்து காய் - கனிகளையும் கிழங்கு வகைகளையும் வேட்டையின் வழியே மனித சமூகம் சேகரிக்கத் தொடங்கின. பின்னாளில் பறவை உள்ளிட்ட விலங்குகளின் இறைச்சியை உணவாக எடுத்துக்கொள்ளும் வழக்கம் வளர்ந்துள்ளது. இதனை, மனிதன் முதன் முதலாக உணவு தேடுவதையே வேலையாகக் கொண்டான். பின் காய், கிழங்கு உண்டான் பின்னர் பறவை விலங்குகளை வேட்டையாடி இறைச்சியைப் பதப்படுத்தி உண்டு வாழ்ந்தான்[4] என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.*

*சங்க இலக்கியங்கள் நில அடிப்படையில் குறிஞ்சி நிலமக்கள் தேனையும் கிழக்கு வகைகளையும் உண்டதைக் குறிப்பிடுகின்றன. அதேபோல பாலை நிலத்தில் வாழ்ந்தோர் புள்ளரிசி சோற்றையும்; முல்லை நிலத்தில் வாழ்ந்தோர் சிவந்த அவரை விதைகலையும் மூங்கில் அரியையும்; மருத நிலத்தில் வாழ்ந்தோர் வெண்சோற்றையும்; நெய்தல் நிலத்தில் வாழ்ந்தோர் குழல்மீனின் சூட்டிறைசியையும் உண்டுள்ளனர். இவ்வாறு உணவுப் பொருகளைக் குறிக்கும் சொற்கல் பலவும் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணக்கிடைக்கின்றன. சான்றாக,*

***அடிசில்[5] உண்டி[6] வல்சி[7] அவல்[8] மூரல்பாலெடு[9]***
***பழஞ்சோறு அமலை[10] அமலை (சோற்றுருண்டை)[11]***
***இன்புளி வெஞ்சோறு[12] ஜவனம்[13] வால், அவிழ் வல்சிநெல்[14] அட்டில்[15]***

*என்னும் சொற்களை சுட்டியுள்ளதைக் குறிப்பிடலாம்.*

**விலங்குகள் (மா)**

*ஐவகை நிலப்பகுதியிலும் பல்வேறு விலங்குகள் காலமாற்றத்திற்கும் தட்பவெட்ப சூழ்நிலைக்கும் ஏற்ப வாழ்ந்துள்ளன. அவ்விலங்குகளுக்கு சங்க இலக்கியத்தில் சுட்டப்பெற்ற பெயர்ச் சொற்களிலிருந்தே அதன் தன்மையையும் திறனையும் அறியலாம். அவ்வகையில் கொடுஞ்செயலான வேட்டையில் ஈடுபடும் விலங்குகள் மற்ற விலங்குகளுக்கும் மனிதர்களுக்கு பெரும் அச்சத்தை தரக்கூடியனவாக இருந்துள்ளன. அதனால் மனிதர்கள் தங்களை உணவுப் பொருளாக எடுத்துகொள்ள விரும்பாத விலங்குகளை மட்டுமே தங்களுக்கான உதவிகளை செய்ய பழக்கிக் கொண்டுள்ளனர். மற்ற விலங்குகளை வேட்டையாடியுள்ளனர். அவ்வாறு வேட்டையாடி கொண்டுவந்த விலங்குகளின் இறைச்சியை விருந்தில் பகிர்ந்துண்டு வாழும் வாழ்முறையை அவர்கள் பின்பற்றியுள்ளனர். இதன் வரலாற்றை சங்க இலக்கியங்கள் ''பாதிடுமுறை'' என்றும் குறிப்பிட்டுள்ளன. இதுகுறித்தச் சொற்களைப் பத்துப்பாட்டு,*

***அரிமா - சிங்கம்[16] ஆ - பசு[17] ஆமான்[18] எகினம் - நாய்[19]***
***ஏறு - காளை[20] துருவை - செம்மறி[21] போத்து - ஆண்புலி[22]***
***கேழல் - ஆண்பன்றி[23] முதலை[24]***

*என்றவாறு குறிப்பிட்டுள்ளன. இதன்றி, அணில், ஆமா, ஆளி, ஆன், இரலை, ஒட்டகம், உளியம், எலி, புலி, முயல், யானை, மந்தி, வெள்ளை25 போன்றப் பெயர்களையும் பத்துப்பாட்டு ஆராய்ச்சியின் வழியே அறியமுடிகிறது.*

**மரம், செடி, கொடிகள்**

*சங்ககாலம் இயற்கை வளமிக்க காலமாக இருந்ததை, மழைவளத்தின் செழிப்பு குறித்தும் மும்மாரி பெய்த மழையினால் மக்கள் மகிழ்ந்து வாழ்ந்த சூழலியல் குறித்தும் அறிய முடிகிறது. இதனை பத்துப்பாட்டில் இடம்பெறும் மரம், செடி, கொடிகளின் பெயர்களும் குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள 99 வகையான பூங்களின் பெயர்களும் குறிப்பிடுவனவாக அமைந்திருக்கின்றன.*

***அகில்[26] அரும்பு[27] அமை[28] அலரி[29] இலவம்[30]***
***எழு-கணையமரம்[31] கடம்பு[32] கழுமரம்[33] காஞ்சி[34] சண்பகம்[35]***

*என்றவாறு பத்துப்பாட்டு மரங்களின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளன.*

**பறவைகள்**

*பறக்கும் ஆற்றலைப் பெற்றதனால் ''பறவை'' என்னும் காரணப்பெயரைப் பெற்ற இனம் பறவையாகும். இவை அந்தந்த நிலப்பரப்பில் கிடைக்கும் உணவை உண்டு வாழும்*

*இயல்புடையனவாக இருந்ததை பத்துப்பாட்டு பலவாறு குறிப்பிட்டுள்ளது. அவ்வகையில்,*

***கிள்ளை[36] கின்னரகம்[37] குடிஞை - பேராந்தை[38] குறும்பூழ்[39]***

*என்னும் குறிப்பிடத்தக்க பறவைகளின் பெயர்கள் பத்துப்பாட்டில் சுட்டப்பட்டுள்ளன. இதுபோல இன்னும் "அன்னம்" பற்றி செய்திகள் மதுரைக் காஞ்சியிலும்; "அன்றில்" பற்றி குறிப்புகள் குறிஞ்சிபாட்டிலும்; "காட்டுக்கோழி" குறித்த பதிவுகள் பெரும்பாணாற்றுப்படையிலும் இடம்பெற்றுள்ளன. அதன்றி, குருகு, குடிஞை, குறும்பூழி கூகை, கொக்கு, சிவல், சுரும்பு நாரை, மயில், மனைக்கோழி, வானம்பாடி, வாரணம், வண்டு40 முதலியப் பெயர்களையும் பத்துப்பாட்டு ஆராய்ச்சியின் வழியே அறியமுடிகிறது. சங்க காலத்தில் பறவைகள் மனிதர்களின் வளர்ப்பு பிராணியாக இருந்தும் இயற்கையுடன் இழைந்தவாறு வாழ்ந்துள்ளது. இச்சூழலிலேயே இதனை தூது பொருளாகப் பயன்படுத்தியக் குறிப்புகள் தூது இலக்கியத்தில் பதியப்பட்டுள்ளன.*

**பறை**

*சங்ககால மரபில் ஐவகை நிலமக்களும் தங்களுக்கான இசைக்கருவியைத் தனித்து பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறு இசைக்கப்பட்ட கருவிகள் பெரும்பான்மையும் பொது நிகழ்வில் இசைக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் குறிஞ்சி நிலமக்கள் தொண்டகப் பறையையும், முல்லை நிலமக்கள் ஏறுகோட் பறையையும், மருத நிலமக்கள் மணமுழாகருவியையும், நெய்தல் நிலமக்கள் மீன்கோட் பறையையும், பாலை நிலமக்கள் ''துடி''யையும் பயன்படுத்தியதை சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. அதன்றி, ஆகுளி[41] என்னும் சிறுபறை இசைக்கருவியை மதுரைக்காஞ்சியும், மலைபடுகடாமும் குறிப்பிட்டுள்ளன. அதேபோல மருத நிலமக்கள் நெல்அரிதலின் போது கிணை[42] என்னும் முழங்கிசை கருவியைப் பயன்படுத்தியுள்ளனர்.*

**தொழில்**

*சங்ககாலத்தில் நில அடிப்படையில் வாழ்ந்த மக்கள் அவர்வர் இருப்பிடத்திற்கும் நிலத்திற்கும் ஏற்ற தொழில்முறைகளை மேற்கொண்டுள்ளனர். அவ்வகையில் மலைசார்ந்த குறிஞ்சி நிலத்தில் ''தினைவிதைத்தல்'', ''அறுவடை செய்தல்'', ''தேனெடுத்தல்'', ''கிழங்கு அகழ்தல்'', உள்ளிட்ட தொழில்களையும்; முல்லை நிலமக்கள் காட்டுப் பகுதியில் '' ஆநிரைகளை மேய்த்தல்'' அந்த ஆநிரைகளைக் கொண்டு பால், தயிர், மோர், வெண்ணெய் முதலிய பொருட்களை விற்று பிற நில பொருட்களை மாற்றாக வாங்குதல்[43] உள்ளிட்ட தொழில்களையும்; மருத நிலமக்கள் ''வயல்களை உழுதல்'', ''நெல் விளைத்தல்'', ''நாற்றுநடுதல்'', ''களை எடுத்தல்'', ''கடா விடுதல்'', முதலான தொழில்களையும்; நெய்தல் நிலமக்கள் ''ஓடம், மிதவை, படகு போன்றவற்றை அமைத்தல்'', ''மீன்பிடித்தல்'', ''உப்பு விளைவித்தல்'', ''மீன்விற்றல்'' போன்ற தொழில்களையும்; மேற்கொண்டுள்ளனர். அதேபோல இவர்கள் வசிப்பதற்கான குடியிருப்புகளையும் தங்களுக்கு ஏற்றவாறு அமைத்து கொண்டுள்ளனர். உடன் பண்டாமாற்று முறையில் தேவையான பொருட்களை மாற்றிகொள்வதன் வழியே அனைவருடனும் நல்லுறவு ஏற்பட வாழ்ந்துள்ளனர். அதன்வழியே மண்ணைக் கொண்டு செய்யப்பட்ட செங்கற்கள் பானைகள் ஆகியவற்றை விற்பனை செய்ததற்கான குறிப்புகளும் பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ளன. அவ்வகையில்,*

***குழிசி - பானை[44] அம்மி, குழவி, திரிகை[45]***

*முதலான பொருட்கள் கிடைத்துள்ளன. அதேபோல தச்சுத் தொழில் செய்தவர்களை, கருந்தொழில் வினைஞர்46 என்றவாறு சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. இவர்கள் தேர்,*

*சக்கரம் முதலான கருவிகளை செய்துள்ளனர். இதன்றி பத்துப்பாட்டில் ஆடை, அணிகலன்கள் செய்யும் தொழில்முறையும்; வாணிபம் முதலான தொழில் முறைகளும் பரவலாகப் பட்டிருந்ததை காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி போன்ற குறிப்புகளின் வழியே அறிய முடிகிறது.*

**யாழ்**

*சங்ககாலத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் "இசை" சிறப்பிடம் பெற்றிருந்ததை, திணைநில வாழ்வில் கருப்பொருள்கள் பற்றி குறிப்பில் தொல்காப்பியர் யாழ், பறை, பண் ஆகியவற்றை குறிப்பிட்டதன் வழியே அறியலாம். அதேபோல நிலம் சார்ந்த மக்கள் ஒவ்வொருவம் ஒவ்வொரு வகையான பண்ணையும் இசைக்கருவிகளையும் பயன் படுத்தியுள்ளனர். குறிப்பாக "குறிஞ்சியாழ்", "முல்லையாழ்", "மருதயாழ்", "விளரி யாழ்" (நெய்தல்), "பாலையாழ்" என்னும் பெயர்கள் அதனை தெரிவிப்பவைகளாக உள்ளன. அத்துடன்,*

***ஆறு அலை கள்வர் படைவிட அருளின்***
***மாறுதலை பெயர்க்கும் மருவுஇன் பாலை[47]***

*என்னும் பாடலடிகள், பாலைநிலத்தின் வழியே செல்பவர்களை அந்நிலத்துப் பொருளை பறிக்கும் கொடுமையான ஆறலைக் கள்வர்கள் கூட, தம் கைகளிலிருந்த படைக்கலங்களைக் கீழே போட்டுவிட்டு அமைதியாகும் வகைக்கானச் சூழலை பாலையாழ் செய்தது என்பதைக் குறிப்பிடுவதாக அமைந்திருக்கிறது. இத்தகைய சிறப்புமிக்க யாழ் பேரியாழ் (21 நரம்புகள்), மகரயாழ் (19 நரம்புகள்), சகோடயாழ் (14 நரம்புகள்), செங்கோட்டியாழ் (7 நரம்புகள்) என நான்கு வகைபடுவதையும், பாணர்கள் இதனைக் கைக்கொண்டிருந்ததையும்,*

***பொன் வார்ந் தன்ன புரிஅடங்கு நரம்பின்***
***இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ[48]***
***என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. அதேபோல,***
***பொன்வார்த் தன்ன புரிஅடங்கு நரம்பின்***
***தொடைஅமை கேள்வி இடவயின் தழீஇ[49]***

*என்னும் பாடலடிகள் "பொன்னை" உருக்கி வார்த்த கம்பி போன்ற முறுக்கு அடங்கின நரம்பின் தொடை அழகைக் குறிப்பிட்டு, அதன் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளன.*

**முடிவுரை**

*நிலம், பொழுதை அடிப்படையாகக் கொண்டு முதற்பொருளையும் அதைச்சார்ந்த வாழ்வில் பயன்படும் வகையிலான கருப்பொருளையும் ஒழுக்க நெறிகளான உரிப்பொருளையும் சங்க இலக்கியச் செய்யுள்களில் காணமுடிகிறது. அதில் உயர்திணை மட்டுமல்லாமல் அஃறிணை உயிரினங்களும் மனிதர்களின் வாழ்வில் பெரும்பங்கு வகிக்கின்றன.*

*சங்ககால மனிதன் இயற்கையைச் சார்ந்தும், அஃறிணையில் உயிர் உள்ளவை, உயிர் அற்றவை ஆகியவற்றைச் சார்ந்தும் வாழ்ந்தான் என்பதில் ஐயமில்லை.*

**அடிக்குறிப்புகள்**

*1. ச.வே.சு.,(உ.ஆ)., தொல்.கிளவியாக்கம்., நூ.484*
*2. மேலது., நூ.654*

3. மேலது., அகத்திணையியல்., நூ.964
4. இராசமாணிக்கனார்., பத்துப்பாட்டு ஆராய்ச்சி., ப.434
5. சிறு.பாணாற்று., பா.அ. 241
6. திருமுருகு., பா.அ.131
7. பெரு.பாணாற்று., பா.அ.194, 343, 255
8. மேலது., பா.அ.216, 226
9. மேலது., பா.அ.168
10. மேலது., பா.அ.224
11. சிறு.பாணாற்று., பா.அ.194
12. மேலது., பா.அ,175
13. ம.காஞ்சி., பா.அ.288
14. மலைபடு., பா.அ.115
15. ப.பாலை., பா.அ.43, 262
16. பொருநராறு., பா.அ2-1
17. பெரு.பாணாற்று., பா.அ.141, 165, 243
18. சிறு.பாணாற்றுப்படை., பா.அ.177
19. பெரு.பாணாற்று., பா.அ.326
20. திருமுருகு., பா.அ.151, 264, 315
21. பொருநராறு., பா.அ.103
22. பெரு.பாணாற்று., பா.அ.138
23. ம.காஞ்சி., பா.அ.174, 295 / பொருநராறு., பா.அ.210
24. கு.பாட்டு., பா.அ.257
25. இராசமாணிக்கனார்., பத்துப்பாட்டு ஆராய்ச்சி., பக்.603-604
26. திருமுருகு., பா.அ.296
27. பொருநராறு., பா.அ.195
28. திருமுருகு., பா.அ.195
29. மு.பாட்டு., பா.அ.10
30. பெரும்.பாணாற்று., பா.அ.83
31. சிறு.பாணாற்று., பா.அ.49
32. திருமுருகு., பா.அ.225
33. பெரு.பாணாற்று., பா.அ.128
34. பொருநராறு., பா.அ.189
35. திருமுருகு., பா.அ.27
36. பெரு.பாணாற்று., பா.அ.227, 300 / கு.பாட்டு., பா.அ.101
37. மேலது., பா.அ.494
38. பொருணராறு., பா.அ.210
39. மேலது., பா.அ.205
40. இராசமாணிக்கனார்., பத்துப்பாட்டு ஆராய்ச்சி., பக்.603-604
41. ம.காஞ்சி., பா.அ.66 / மலைபடு., பா.அ.03
42. சிறு.பாணாற்று., பா.அ.82
43. ந.மம்மது., தமிழர் திணை., ப.97

*44. பெரு.பாணாறு., பா.அ.99*
*45. மேலது.,*
*46. சிறு.பாணாறு., பா.அ.25*
*47. பொருணற்று., பா.அ.21-22*
*48. சிறு.பாணாறு., பா.அ.34 - 35*
*49. பெரு.பாணாறு., பா.அ. 14- 15*

**துணைநூற்பட்டியல்**


1. *இராசமாணிக்கனார்., பத்துப்பாட்டு ஆராய்ச்சி., சாகித்திய அகாதெமி வெளியீடு, புதுதில்லி., பதிப்பு 2012.*
2. *ச.வே.சு., (உ.ஆ)., தொல்காப்பியம் (எழுத்து, சொல், பொருள்)., மெய்யப்பன் பதிப்பகம்., சிதம்பரம்., முதல்பதிப்பு 2000.*
3. *மம்மது.நூ., தமிழர் திணை., வம்சி புக்ஸ்., திருவண்ணாமலை., முதல் பதிப்பு 2016.*
4. *மாணிக்கனார்.அ., (உ.அ)., சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் உரையும் - பாகம் 12., வர்த்தமானன் பதிப்பகம்., சென்னை., முதல் பதிப்பு 1999.*
5. *மோகன்.இரா., (உ.ஆ)., பத்துப்பாட்டு மூலமும் உரையும்., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்., சென்னை., முதல் பதிப்பு 2011.*